ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1711/8 - 2011 ජූනි 21 වැනි අඟහරුවාදා - 2011.06.21

*1711/8 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 937*

**இயற்கைத் தன்மை கெடாத குடிபான வகையினைச் சார்ந்ததும், விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்டதுமான மதுபானத்தினை ஏற்றுமதி செய்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும். காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) (அ) உப பிரிவின் கீழ் சனாதிபதியால் இக்கட்டளை ஆக்கப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2011,யூன் 20.*

*கட்டளை*

*மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ், மதுவரி ஆணையாளரினால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டின் பேரில் மேற்கொள்ளப்படும் இயற்கைத் தன்மை கெடாத, குடிபான வகையினைச் சார்ந்ததும், விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்டதுமான மதுபான ஏற்றுமதி அனுமதி, மதுவரித் தீர்வையொன்றினைச் செலுத்துவதன் பேரில் அல்லது வரித் தீர்வையற்ற அடிப்படையின் பேரில் அவ்வாறான பொருளை ஏற்றுமதி செய்வதற்காக முறியொன்றினை அல்லது வங்கி உத்தரவாதம் ஒன்றின் பேரில் அல்லது வழங்கலின் பேரில் வழங்கப்படும். எனினும் அம்முறி அல்லது வங்கி உத்தரவாதம் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருத்தல் வேண்டும் என இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*இவ்வறிவித்தலின் நோக்கங்களுக்காக, இயற்கைத் தன்மை கெடாத, குடிபான வகையினைச் சார்ந்த விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான ஏற்றுமதியினைச் சார்ந்த, விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான ஏற்றுமதியாளர்கள் மதுவரி உரிமம் பெற்றவர்கள் என கருதப்படுவதுடன், அவர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து அல்லது மொத்த விற்பனையாளர்களிடமிருந்து மேற்குறித்த வகை மதுபானத்தினை ஏற்றுமதிக்காக கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவர்.*

ஏற்றுமதியாளர்கள் தீர்வையற்ற வரிச் சலுகையினை பெற்றுக் கொள்வதற்காக இயற்கைத் தன்மை கெடாத, குடிபான வகையினைச் சார்ந்த, விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானத்தினை ஏற்றுமதி செய்த தினம் முதல் 30 நாட்களுக்குள் இங்கு, கீழ் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் அனைத்து வகை ஆவணங்களையும் மதுவரி ஆணையாளர் திருப்தியுறும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும். மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு குறித்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக 60 நாட்கள் வரையிலான காலக்கெடுவொன்று வழங்கப்படும். இவ்வாறு ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் ஏற்றுமதியாளர்கள், அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளுக்கு மேலதிகமாக, விதிக்கப்பட்ட தீர்வை வரியின் அளவிற்கு அமைய மதுவரி செலுத்தப்படுதல் வேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 01 ஆந் திகதிய 1386/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 878 இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அட்டவணை**

(1) ஏற்றுமதி செய்யப்பட்ட இயற்கைத் தன்மை கெடாத, குடிபான வகையினைச் சார்ந்த, விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான வகைக்கான விபரங்கள் உள்ளடங்கிய சரக்குப் பட்டியல் ;

(2) வார்நாமம் அல்லது விமான வார்நாமம் ;

(3) சுங்க ஏற்றுமதிப்பத்திரம்.

7- 296

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.